# திருத்தங்கல் நகராட்சி

## சாதாரண கூட்டம்

நிகழும் ஸ்ரீவிளம்பி வருடம் வைகாசி திங்கள் 17ம் நாள் **31 –05–2019** ம் தேதி வெள்ளிகிழமை காலை **11.00** மணியளவில் நகராட்சி அலுவலகத்தில் வைத்து சாதாரண கூட்டம் நடைபெறும்.

**முன்னிலை : திரு.மா. சுவாமிநாதன்**

திருத்தங்கல் நகராட்சி
நாள் . 27–05–2019

தனிஅலுவலர்
திருத்தங்கல் நகராட்சி

**பொருள்–284**

### 2019-ம் வருடத்திய தமிழ்நாடு சட்டம் 12-ன் கீழ் ஏற்படுத்தப்படும் உப விதிகள்

2019-ம் வருடத்திய தமிழ்நாடு நகராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டத்தின் படி 1920ம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டப்பிரிவு 306(28A), 308(a,b), 308A இணைப்பு பட்டியல் VIIIA எனும் புதிய இணைப்பு பட்டியலின் படி நெகிழி மொத்த விற்பனை, உற்பத்தி செய்தல், சேமித்து வைத்தல், விற்பனை, எடுத்துச் செல்லுதல் மற்றும் பயன்படுத்துதல் முதலியன தடை செய்யப்பட்டு அபராதத் தொகை விதிக்கப்பட்டுள்ளதை கீழ்க்கண்டவாறு உப விதிகள் ஏற்படுத்த

1 (i) **செயலாக்க அதிகாரி:** நகராட்சிப் பகுதிகளில் செயலாட்சி அதிகாரி எனப்படுபவர் நகராட்சி ஆணையர் ஆவர்.

(ii) **ஆய்வு நடத்தும் அதிகாரி:** ஆய்வு நடத்தும் அதிகாரி எனப்படுபவர்கள் நகராட்சிப் பகுதிகளில் துப்புரவுபணி மேற்பார்வையாளர், துப்புரவு ஆய்வாளர், துப்புரவு அலுவலர் மற்றும் ஆணையரால் அதிகாரமளிக்கப்பட்ட பிற பணியாளர்களாவர்.

(iii) **மேல்முறையீட்டு அலுவலர்:** இந்த உபவிதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ள பொருளடக்கம் தொடர்பான கருத்துகளில் மேல் முறையீட்டு அலுவலர் ஆணையரே ஆவார்.

(iv) **தண்டனைகள் விதிக்கும் முறைகள்:** ஷை சட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள ஷரத்துக்களை மீறுபவர்களுக்கு உடனடி ஸ்தல அபராதம், குடிநீர் இணைப்பு துண்டித்தல், பொருள்களை பறிமுதல் செய்தல் அச்சம் மற்றும் அருவருக்கத்தக்கதுமான தொழில்களுக்கான உரிமம் ரத்து செய்தல் (D&O) முதலியன தண்டனை முறைகள்

5 (v) **வர்த்தக நிறுவனங்களின் வகைப்பாடு :**

1. மொத்த சேமிப்பாளர் / விநியோகிப்பாளர்

a) 1 ச.அடி முதல் 500 ச.அடி பரப்பளவு கொண்ட கட்டிடம்

b) 501 ச.அடி முதல் 1000 ச.அடி பரப்பளவு கொண்ட கட்டிடம்

c) 1001 ச.அடி முதல் 1500 ச.அடி பரப்பளவு கொண்ட கட்டிடம்

d) 1501 ச.அடி முதல் 2000 ச.அடி பரப்பளவு கொண்ட கட்டிடம்

e) 2000-ம் அதற்கு மேல்.

2. **வணிக வளாகங்கள்:**

a) பெரிய மற்றும சிறிய துணிக்கடைகள்

b) பல்பொருள் அங்காடிகள் பெரியது

c) திரையரங்குகள்

d) அரசு மதுபானக்கடை, மதுபான விற்பனைக் கூடங்கள் (BARS) மனமகிழ்மன்றம் முதலான இதர இனங்கள்

e) கல்வி நிறுவன வளாகங்கள்

f) அரசு, அரசு சார்பு நிறுவனங்கள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களின் வளாகங்கள்

g) திருமண மண்டபங்கள், தங்கும் விடுதிகள் முதலானவை

h) பெரிய, நடுத்தர மற்றும் சிறிய தொழிற்சாலைகள்

3 மளிகைக் கடைகள், காய்கறிக்கடைகள், பழக்கடைகள், மருந்துக்கடைகள், பழச்சாறு விற்பனைக்கடைகள், இறைச்சி மற்றும் மீன்கடைகள் முதலானவைகள்,

4 சிறிய வணிக விற்பனையாளர்கள், தெருவோர கடைகாரர்கள் மற்றும் இதர வணிகம் செய்பவர்கள்

II **தண்டனைகள் விபரம்**

**பிரிவு 306 (28-A)-இன்படி இயற்றப்பட்ட துணை விதிகளை மீறுவதற்கான தண்டங்கள்**

| வரிசை எண். | குற்றங்கள் | முதன்முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் | இரண்டாம் முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் | மூன்றாம் முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் |
|---|---|---|---|---|
| 1. | பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை சேமித்தல், வழங்குதல் கொண்டு செல்லுதல் விற்பனை செய்தல் மற்றும பகிர்ந்தளித்தல் | இருபத்தைந்தாயிரம் ரூபாய் | ஐம்பதாயிரம் ரூபாய் | ஒரு லட்சம் ரூபாய் |
| 2. | வணிக வளாகங்கள், துணிக்கடைகள் மற்றும் பல்பொருள் அங்காடிகள் போன்ற மிகப்பெரிய வணிக நிறுவனங்களில் பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் | பத்தாயிரம் ரூபாய் | பதினைந்தாயிரம் ரூபாய் | இருபத்தைந்தாயிரம் ரூபாய் |
| 3. | மளிகைக்கடைகள் மற்றும் மருந்துக்கடைகள் போன்ற நடுத்தர வணிக நிறுவனங்களில் பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் | ஓராயிரம் ரூபாய் | இரண்டாயிரம் ரூபாய் | ஐந்தாயிரம் ரூபாய் |
| 4. | சிறிய வணிக விற்பனையாளர்கள் பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் | ஒரு நூறு ரூபாய் | இருநூறு ரூபாய் | ஐநூறு ரூபாய் |

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.957/2019/எச்1)**

**பொருள்–285**

திருத்தங்கல் நகராட்சியில் 1 முதல் 21 வார்டுகளையும் மறுவரையறை செய்து வரைப்படம் தயார் செய்தல் , (Auto Card) கலர் பிரிண்ட் எடுத்தல் ஆகிய பணிகளை மேற்கொள்ள விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. அவை மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் விபரம் | அக்ஷரா கன்ஷ்ரக்சன்ஸ் சிவகாசி | | லட்சுமி சங்கர் கன்ஷ்ரக்சன்ஸ், திருத்தங்கல் | | ஸ்ரீ கங்கா கன்ஷ்ரக்சன், திருத்தங்கல் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | பிரிண்ட்–1க்கு | வரைபடம் தயார் செய்தல் | பிரிண்ட்–1க்கு | வரைபடம் தயார்செய்தல் | பிரிண்ட்–1க்கு | வரைபடம் தயார்செய்தல் |
| 1 | ஒருங்கிணைந்த வரைந்த வரைப்படம்(கலர்)எல்லைக்கோடுகள் உட்பட | ரூ.150/– | ரூ.1900/– | ரூ.155/– | ரூ.1910/– | ரூ.160/– | ரூ.1920/– |
| 2 | ஒவ்வொரு வார்டுக்கும் தனித்தனி வண்ணமிட்டுகாட்டுதல், ஒவ்வொரு வார்டுக்கும் தனித்தனியாக வரைப்படம்(Add paper) | ரூ.250/– | ரூ.2800/– | ரூ.255/– | ரூ.2810/– | ரூ.260/– | ரூ.2820/– |
| 3 | மொத்த வார்டு வரைப்படத்தில் ஒவ்வொரு வார்டுக்கும் வேறுவேறு வண்ணம் கொடுத்த மொத்த வார்டு வரைப்படம் | ரூ.280/– | ரூ.3900/– | ரூ.285/– | ரூ.3910/– | ரூ.290/– | ரூ.3920/– |
| 4 | ஒவ்வொரு வார்டுக்கும் தனித்தனி வரைப்படம் 1முதல் 21 வார்டுக்கும் | ரூ.50/– | ரூ.3150/– | ரூ.55/– | ரூ.3160/– | ரூ.60/– | ரூ.3170/– |

மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற 3விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள் வழங்கிய அக்ஷரா கன்ஷ்ரக்சன்ஸ் – சிவகாசி அவர்களின் விலைப்புள்ளியை ஏற்க மன்றத்தில் பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு–
மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1821/2011 /இ1)

**பொருள்–286**

திருத்தங்கல் நகராட்சி வார்டு எண்.01 அண்ணா காலனி பகுதியில் உள்ள குடிநீர் குழாய்கள் பதிக்கப்பட்டு பல ஆண்டுகள் ஆகிவிட்ட படியால் மேற்படி குழாய்களில் அடிக்கடி பழுதுகள் ஏற்படுகின்றது. இதனால் அப்பகுதியில் உள்ள மக்களுக்கு சரிவர குடிநீர் விநியோகம் செய்ய முடியாத நிலை உள்ளது. எனவே மேற்படி பழுதான குடிநீர் குழாய்களை மாற்றி அப்பகுதி மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்ய ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.5,00,000/- (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**
மன்றம் அனுமதிக்கலாம்
ந.க.எண். 185/2019/இ1

**பொருள்–287**

திருத்தங்கல் நகராட்சி பொது நிதித் திட்டம் ( General Fund 2019-2020 ) திட்டத்தின் கீழ் 05.03.2019-ம் தேதி அன்று வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் விபரம் | மதிப்பீட்டு தொகை (இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி விபரம் (%குறைவு ரூ. % கூடுதல்) |
|---|---|---|---|---|
| | வார்டு எண் 1 முதல் 5 வரை உள்ள குடிநீர் குழாய்கள் பழுது | 10.00 | M.கண்ணன் | 0.34% குறைவு |

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | பார்க்கும் வருடாந்திர ஒப்பந்தம் (பொருள்கள் உள்பட) பணி | | M.ஐயப்பன் | 0.27% கூடுதல் |
| 2 | வார்டு எண் 6 முதல் 10 வரை உள்ள குடிநீர் குழாய்கள் பழுது பார்க்கும் வருடாந்திர ஒப்பந்தம் (பொருள்கள் உள்பட) பணி | 10.00 | M.கண்ணன் | 0.34% குறைவு |
| | | | M.ஐயப்பன் | 0.27% கூடுதல் |
| 3 | வார்டு எண் 11 முதல் 15 வரை உள்ள குடிநீர் குழாய்கள் பழுது பார்க்கும் வருடாந்திர ஒப்பந்தம் (பொருள்கள் உள்பட) பணி | 10.00 | M.கண்ணன் | 0.34% குறைவு |
| | | | M.ஐயப்பன் | 0.27% கூடுதல் |
| 4 | வார்டு எண் 16 முதல் 21 வரை உள்ள குடிநீர் குழாய்கள் பழுது பார்க்கும் வருடாந்திர ஒப்பந்தம் (பொருள்கள் உள்பட) பணி | 10.00 | M.கண்ணன் | 0.34% குறைவு |
| | | | M.ஐயப்பன் | 0.27% கூடுதல் |
| 5 | வார்டு எண் 1 முதல் 7 வரை உள்ள மின் மோட்டார்கள் பழுது பார்க்கும் (வருடாந்திர ஒப்பந்தம்) பணி | 10.00 | M.கண்ணன் | 0.51% குறைவு |
| | | | P.முருகன் | 0.40% குறைவு |
| 6 | வார்டு எண் 8 முதல் 14 வரை உள்ள மின் மோட்டார்கள் பழுது பார்க்கும் (வருடாந்திர ஒப்பந்தம்) பணி | 10.00 | M.கண்ணன் | 0.51% குறைவு |
| | | | P.முருகன் | 0.40% குறைவு |
| 7 | வார்டு எண் 15 முதல் 21 வரை உள்ள மின் மோட்டார்கள் பழுது பார்க்கும் (வருடாந்திர ஒப்பந்தம்) பணி | 10.00 | M.கண்ணன் | 0.51% குறைவு |
| | | | P.முருகன் | 0.40% குறைவு |
| 8 | வார்டு எண் 1 முதல் 21 வரை உள்ள மின் தெரு விளக்குகளை பழுது பார்க்கும் (வருடாந்திர ஒப்பந்தம் - கூலி ஒப்பந்தம் மட்டும்) பணி | 5.50 | K.கிருஷ்ணசாமி | 0.23% குறைவு |
| | | | P.முருகன் | 0.35% கூடுதல் |
| 9 | திருத்தங்கல் நகராட்சி குளோரின் சிலிண்டர் சப்ளை செய்யும் பணி | 4.00 | R.K. Enterprises | 0.15% குறைவு |
| | | | P.முருகன் | 0.35% கூடுதல் |
| 10 | வார்டு எண் 1 முதல் 21 வரை உள்ள அடிகுழாய்கள் பழுது பார்க்கும் (வருடாந்திர ஒப்பந்தம் கூலி ஒப்பந்தம் மட்டும்) பணி | 5.00 | M.கண்ணன் | 0.15% கூடுதல் |
| | | | P.முருகன் | 0.18% குறைவு |
| 11 | திருத்தங்கல் நகராட்சி பகுதியில் உள்ள 13 எண்ணம் உயர்மின் கோபுர விளக்குகளில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளும் (வருடாந்திர ஒப்பந்தம் பொருள்கள் உள்பட) பணி | 4.00 | K.கிருஷ்ணசாமி | 0.20% குறைவு |
| | | | P.முருகன் | 0.15% கூடுதல் |
| | திருத்தங்கல் நகராட்சி பகுதியில் உள்ள ஆழ்துளை | 10.00 | P.முருகன் | 0.51% கூடுதல் |

| | | | | |
|---|---|---|---|---|
| 12 | கிணறுகளுக்கு புதிய மின் மோட்டார்கள் மற்றும் பேனல் போர்டுகள் சப்ளை செய்யும் பணி | | M.கண்ணன் | 0.42% குறைவு |
| 13 | திருத்தங்கல் நகராட்சியில் ஆழ்துளை கிணறு மற்றும் திறந்த வெளி கிணறுகளில் இயங்கும் மின் மோட்டார் பராமரிக்க தேவையான உதிரி சாமன்கள் சப்ளை செய்யும் பணி | 10.00 | P.முருகன் | 0.10% கூடுதல் |
| | | | M.கண்ணன் | 0.12% குறைவு |

மேற்காண் அட்டவணை வரிசை எண். 1 முதல் 13 எண்ணம் உள்ள பணிகளுக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மேற்காண் அட்டவணை வரிசை எண்.1,2,3,4 ஆகிய பணிகளுக்கு மதிப்பீட்டுத் தொகையினை விட 0.34% குறைவு ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கியுள்ள ஒப்பந்ததாரர் திரு.எம்.கண்ணன் அவர்களின் ஒப்பந்தப்புள்ளி, வரிசை எண். 5,6,7-ல் உள்ள பணிக்களுக்கு மதிப்பீட்டுத் தொகையினை விட 0.51% குறைவு ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கியுள்ள ஒப்பந்ததாரர் திரு.எம்.கண்ணன் அவர்களின் ஒப்பந்தப்புள்ளி, வரிசை எண். 8-ல் உள்ள பணிக்கு மதிப்பீட்டுத் தொகையினை விட 0.23% குறைவு ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள ஒப்பந்ததாரர் திரு.கே.கிருஷ்ணசாமி அவர்களின் ஒப்பந்தப்புள்ளி , வரிசை எண். 9-ல் உள்ள பணிக்கு மதிப்பீட்டுத் தொகையினை விட 0.15% குறைவு ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கியுள்ள ஒப்பந்ததாரர் திரு.R.K. Entrerprises அவர்களின் ஒப்பந்தப்புள்ளி, வரிசை எண். 10-ல் உள்ள பணிக்கு மதிப்பீட்டுத் தொகையினை விட 0.18% குறைவு ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள ஒப்பந்ததாரர் திரு.பி.முருகன் அவர்களின் ஒப்பந்தப்புள்ளி, வரிசை எண். 11-ல் உள்ள பணிக்கு மதிப்பீட்டுத் தொகையினை விட 0.20% குறைவு ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கியுள்ள ஒப்பந்ததாரர் திரு.கே.கிருஷ்ணசாமி அவர்களின் ஒப்பந்தப்புள்ளி, வரிசை எண்.12-ல் உள்ள பணிக்கு மதிப்பீட்டுத் தொகையினை விட 0.42% குறைவு, மற்றும் வரிசை எண். 13-ல் உள்ள பணிக்கு மதிப்பீட்டுத் தொகையினை விட 0.12% குறைவு ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கியுள்ள ஒப்பந்ததாரர் திரு.எம்.கண்ணன் அவர்களின் ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக்குறிப்பு:-**
மன்றம் அனுமதிக்கலாம்
ந.க.எண். 199/இ1/2019

**பொருள்–288**

திருத்தங்கல் நகராட்சி பொது நிதித் திட்டம் ( General Fund 2019-2020 ) திட்டத்தின் கீழ் 05.03.2019-ம் தேதி அன்று வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் விபரம் | மதிப்பீட்டு தொகை (இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி விபரம் (%குறைவு ரூ. % கூடுதல்) |
|---|---|---|---|---|
| 1 | திருத்தங்கல் நகராட்சி தாளோடை நீரேற்று நிலையத்தில் இருந்து வார்டு எண். 01 அண்ணா காலனிக்கு குடிநீர் குழாய்கள் பதிக்கும் பணி | 10.00 | M.கண்ணன் | 0.27% குறைவு |
| | | | P.முருகன் | 0.34% கூடுதல் |

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.27% குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள ஒப்பந்ததாரர் **திரு.எம்.கண்ணன்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலகக்குறிப்பு**
மன்றம் அனுமதிக்கலாம்
(ந.க.எண் : 185/இ1/2019)

**பொருள்–289**

திருத்தங்கல் நகராட்சி பொது நிதித் திட்டம் ( General Fund 2019-2020 ) திட்டத்தின் கீழ் 05.03.2019-ம் தேதி அன்று வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் விபரம் | மதிப்பீட்டு தொகை (இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி விபரம் (%குறைவு ரூ. % கூடுதல்) |
|---|---|---|---|---|

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | **திருத்தங்கல் நகராட்சி**<br><br>வ.எண்.01 அண்ணா காலனி பகுதியில் உள்ள கிணற்று நீர் குழாய்களை மாற்றி அமைக்கும் பணி | 5.00 | M.கண்ணன் | 0.27% குறைவு |
| | | | P.முருகன் | 0.34% கூடுதல் |

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.27% குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள ஒப்பந்ததாரர் **திரு.எம்.கண்ணன்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண் : /இ1/2019)

**பொருள்–290**

திருத்தங்கல் நகராட்சியில் 2019–20 ஆண்டிற்கு நகராட்சி மூலம் புதிதாக வீட்டுக் குழாய் இணைப்புகள் வழங்கிட அரசாணை எண். 97/12.07.2007–ன் படி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண். 748/08 குடிநீர் வழங்கல் துறை நாள்: 21.09.2009–ன் படியும் நடப்பாண்டான 2019–20க்கு ஏப்ரல் 2019 முதல் புதிதாக பெறப்படும் குடிநீர் குழாய் இணைப்பு விண்ணப்பங்களுக்கு கீழ்க்காணும் விபரப்படி கட்டணம் வசூல் செய்திட மன்றத்தில் பொருள் வைக்க பொறியாளர் மற்றும் ஆணையரின் ஒப்புதலுக்காக.

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | பதிவுக் கட்டணம் | | | ரூ.500/– |
| 2. | **வைப்புத் தொகை**<br>அ) வீட்டு பயன்பாடு<br>ஆ) வீட்டு பயன்பாடல்லாதவை | | | <br>ரூ.7750/–<br>ரூ.15,500/– |
| **சாலை சீரமைப்பு கட்டணம்** | | | | |
| 3. | நகராட்சிக்கு செலுத்தும் கட்டணம் | கருங்கல் சல்லி சாலை ரூ. | தார் சாலை ரூ | சிமெண்ட் சாலை ரூ. |
| | | கட்டணம் | கட்டணம் | கட்டணம் |
| | 0–30 மீட்டர் நீளத்திற்கு | 1720/– | 3675/– | 4250/– |
| | 30–90 மீட்டர் நீளத்திற்கு | 2850/– | 4655/– | 5225/– |
| **மேற்பார்வைக் கட்டணம்** | | | | |
| 4. | நகராட்சிக்கு செலுத்தும் கட்டணம் | கருங்கல் சல்லி சாலை ரூ | தார் சாலை ரூ | சிமெண்ட் சாலை ரூ. |
| | | மேற்பார்வைக் கட்டணம் (20%) | மேற்பார்வைக் கட்டணம் (20%) | மேற்பார்வைக் கட்டணம் (20%) |
| | 0–30 மீட்டர் நீளத்திற்கு | 345/– | 735/– | 850/– |
| | 30–90 மீட்டர் நீளத்திற்கு | 570/– | 935/– | 1045/– |
| 5. | ஆய்வுக் கட்டணம் | | | ரூ. 750/– |

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண். 3257 /2018/இ2)

**பொருள்–291**

இந்நகர் பகுதிகளில் கனிம வளத்துறை நிதி திட்டம் 2018-19 (PMKEEY)-ன் கீழ் சாலைப் பணிகள் மேற்கொள்வதற்கு தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களை தேர்வு செய்யும் பொருட்டு மேற்காண் பணிக்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை 26.02.2019-ம் தேதியன்று DECCAN CHRONICLE சென்னை, கோவை பதிப்புகளிலும் 29.02.2019-ம் தேதிய மாலை முரசு நாளிதழில் சென்னை, நெல்லை, மதுரை, கோவை, தஞ்சை, சேலம், வேலூர் பதிப்புகளில் வெளியிடப்பட்டமைக்கான பட்டியல் Bright Advertising என்ற விளம்பர நிறுவனத்திடமிருந்து வரப்பெற்றுள்ளது. பட்டியல் எண். 6522 நாள். 28.02.2019 தொகை ரூ.55,088 (ஐம்பத்தி ஐந்தாயிரத்தி எண்பத்தி எட்டு ரூபாய்) மட்டும் மேற்காண் நாளிதழுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக்குறிப்பு:-**

மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண். 3594/இ1/2018

**பொருள்–292**

திருத்தங்கல் நகராட்சி விருதுநகர் மாவட்ட கனிமவள அறக்கட்டளை நிதி திட்டம் 2018-19 (Mines and Minerals) திட்டத்தின் கீழ் 04.03.2019-ம் தேதி அன்று வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் விபரம் | மதிப்பீட்டு தொகை (இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி விபரம் (%குறைவு ரூ. % கூடுதல்) |
|---|---|---|---|---|
| 1 | **திருத்தங்கல் நகராட்சி**<br>சுக்கிரவார்பட்டி சாலை முதல் பெரிய குளம் கண்மாய் வரை உள்ள சாலை 2 எண்ணம் பாலங்களுடன் தார்ச்சாலை அமைக்கும் பணி | 150.00 | M.கண்ணன் | 4.91% கூடுதல் |
| | | | P.சுப்புராஜ் | 6.15 % கூடுதல் |

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 4.91% கூடுதலில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள ஒப்பந்ததாரர் **திரு.எம்.கண்ணன்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**
மன்றம் அனுமதிக்கலாம்
(ந.க.எண் : 3594/இ1/2018)

**பொருள்–293**

திருத்தங்கல் நகராட்சி விருதுநகர் மாவட்ட கனிமவள அறக்கட்டளை நிதி திட்டம் 2018-19 (Mines and Minerals) திட்டத்தின் கீழ் 04.03.2019-ம் தேதி அன்று வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் விபரம் | மதிப்பீட்டு தொகை (இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி விபரம் (%குறைவு ரூ. % கூடுதல்) |
|---|---|---|---|---|
| 1 | **திருத்தங்கல் நகராட்சி**<br>இந்திரா நகர், 52 வீட்டுக்காலனி, எம்.ஜி.ஆர் நகர் மற்றும் கண்ணகி காலனி ஆகிய பகுதிகளில் தார்ச்சாலை அமைக்கும் பணி | 150.00 | M.கண்ணன் | 4.91% |
| | | | P.சுப்புராஜ் | 6.59% |
| | | | K.கிருஷ்ணசாமி | 4.75% |

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 4.75% கூடுதலில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள ஒப்பந்ததாரர் **திரு. K.கிருஷ்ணசாமி** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**
மன்றம் அனுமதிக்கலாம்
(ந.க.எண் : 3594/இ1/2018)

**பொருள்–294**

திருத்தங்கல் நகராட்சி விருதுநகர் மாவட்ட கனிமவள அறக்கட்டளை நிதி திட்டம் 2018-19 (Mines and Minerals) திட்டத்தின் கீழ் 04.03.2019-ம் தேதி அன்று வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் விபரம் | மதிப்பீட்டு தொகை (இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி விபரம் (%குறைவு ரூ. % கூடுதல்) |
|---|---|---|---|---|
| 1 | **திருத்தங்கல் நகராட்சி**<br>வார்டு எண். 18 சுக்கிரவார்பட்டி மெயின் ரோடு மற்றும் குறுக்குத் | 150.00 | M.கண்ணன் | 4.97% கூடுதல் |

| | | | | |
|---|---|---|---|---|
| | தெருக்களில் தார்ச்சாலை அமைக்கும் பணி | | P.சுப்புராஜ் | 5.73 % கூடுதல் |

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 4.97% கூடுதலில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள ஒப்பந்ததாரர் **திரு.எம்.கண்ணன்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண் : 3594/இ1/2018)

**பொருள்–295**

திருத்தங்கல் நகராட்சியில் தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் சாலைப் பணிகள், தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் நுண்ணுயிர் செயலாக்க மையங்கள், Biomining பணிகள் மற்றும் தாமிரபரணி ஆற்று நீரினை ஆதாரமாக கொண்டு புதிய கூட்டு குடிநீர் திட்டப் பணிகள் போன்ற பல்வேறு திட்டப்பணிகள் நடைப்பெற்று வருகின்றன இவைகள் தவிர பொதுமக்களின் அத்தியவாசியத் தேவையான குடிநீர் விநியோகம் மற்றும் பொது சுகாதாரம் போன்ற பணிகளை நகர் பகுதி முழுவதும் ஆய்வு செய்ய ஏதுவாக இந்நகராட்சி பொறியியல் பிரிவிற்கு புதிய டீசல் ஈப்பு வாகனம் ஒன்று ரூ.10.00 (பத்து இலட்சம்) மதிப்பில் வாங்கி பயன்படுத்தி கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண் : 721/இ1/2019)

**பொருள்–296**

இந்நகராட்சியின் தெற்கு பகுதியில் 1988-ம் ஆண்டு கட்டப்பட்டுள்ள 2.40 x 2.50 மீட்டர் அளவுள்ள வடக்கு முகப்பாக 9 கடைகள் மற்றும் தெற்கு முகப்பாக 9 கடைகள் ஆக மொத்தம் 18 எண்ணம் கடைகள் கட்டப்பட்டுள்ளது. மேற்படி கடைகள் அனைத்தும் உபயோகம் இல்லாமல் பழுதடைந்து பாதுகாப்பற்ற நிலையில் உள்ளது. மேலும் மழைக்காலங்களில் கொசு புழுக்கள் உருவாக்கத்திற்கும் காரணமாக உள்ளது. எனவே பொது சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு அவசர அவசியம் கருதி மேற்படி கடைகளை இடித்து அப்புறப்படுத்தி அந்த பகுதியினை சுத்தமாக வைத்துக்கொள்ளவும் அந்த இடத்தில் நகராட்சி வாகனங்கள் நிறுத்துவதற்கான செட் அமைக்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக்குறிப்பு:-**

மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண். 758/2019/இ1

**பொருள்–297**

திருத்தங்கல் நகராட்சி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2018-2019-ன் கீழ் நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட அட்டவணை 1-ல் காணும் பணிக்கு பதிலாக அட்டவணை 2-ல் காணும் பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதன் விவரம் பின்வருமாறு.

அட்டவணை - 1 நிர்வாக அனுமதி ரத்து செய்யப்பட்ட பணிகள்

| வ. எண் | பணியின் பெயர் / செயல்படுத்தும் அலுவலர் | மொத்த மதிப்பீடு (ரூ) இலட்சத்தில் | சட்டமன்ற உறுப்பினர் ஒதுக்கீடுத் தொகை (ரூ) இலட்சத்தில் |
|---|---|---|---|
| | நகராட்சி ஆணையாளர், திருத்தங்கல் | | |
| 1. | திருத்தங்கல் நகராட்சி வார்டு எண்.18 மற்றும் 19-ல் நியாய விலைக் கட்டிடம் கட்டுதல் | 10.00 | 5.00 |

அட்டவணை - 2 திருத்திய நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட பணிகள்

| வ. எண் | பணியின் பெயர் / செயல்படுத்தும் அலுவலர் | மொத்த மதிப்பீடு (ரூ) இலட்சத்தில் | நகராட்சி பொது நிதி (ரூ) இலட்சத்தில் | சட்டமன்ற உறுப்பினர் ஒதுக்கீடுத் தொகை (ரூ) இலட்சத்தில் |
|---|---|---|---|---|
| | **நகராட்சி ஆணையாளர், திருத்தங்கல்** | | | |
| 1. | திருத்தங்கல் நகராட்சி வார்டு எண். 19 வடக்கு ரத வீதியில் 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி கட்டுதல் | 10.00 | 5.00 | 5.00 |

மேற்படி அட்டவணை எண்.1-ல் உள்ள 1 எண்ணம் பணிக்கு பதிலாக அட்டவணை எண். 2-ல் உள்ள 1 எண்ணம் பணிக்கு திருத்திய நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண். 2376/2018/இ1

**பொருள்–298**

திருத்தங்கல் நகராட்சி பகுதியில் உள்ள அக்ரஹாரம், முத்துமாரியம்மன் காலனி, பாண்டியன் நகர், பெரியார் காலனி மற்றும் சிறுவர் பூங்கா ஆகிய 5 எண்ணம் அங்கன் வாடி மையங்களில் குடிநீர் வசதிகள் மேற்கொள்ள மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.அ3/3303/2018 நாள்.18.02.2019-ன் படி நிர்வாக அனுமதி வழங்கியுள்ளதனை தொடர்ந்து மேற்படி 5 எண்ணம் அங்கன் வாடி மையங்களில் குடிநீர் வசதிகள் மேற்கொள்ள ரூ.1,40,000/-(ரூபாய் ஒரு இலட்சத்தி நாற்பது ஆயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண் : 339/இ1/2019)

**பொருள்–299**

இந்நகராட்சி தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனத்திற்கு **2018–2019**ம் ஆண்டு ள்ள நகராட்சி பங்களிப்புத்தொகை ரூ. **50,000/–**ஐ செலுத்துவது குறித்து மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு –**

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் : 344/2016/சி1)

**பொருள்–300**

திருத்தங்கல் நகராட்சி பொதுநிதி திட்டம் 2018-2019-ம் ஆண்டு வார்டு எண். 1 முதல் 21 வரை உள்ள மின் தெரு விளக்குகளை பழுது பார்க்கும் வருடாந்திர ஒப்பந்தம் அடிப்படையில் திரு.கே.கிருஷ்ணசாமி என்பருக்கு 2018-19-ம் ஆண்டு ஒப்பந்தம் விடப்பட்டது. மேற்கண்ட பணிக்கு ஒப்பந்தகாலம் 31.03.2019-ல் முடிவடைகிறது. தற்சமயம் பாராளுமன்ற தேர்தல் 2019-ன் நடத்தை விதிகள் அமலில் உள்ள காரணத்தினால் மேற்காண் பணிக்கு புதிய ஒப்பந்தப்புள்ளிகள் கோர இயலாத சூழ்நிலைகள் உள்ளது. மேலும் மேற்படி பணிக்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி பெற்றப்பட்ட தொகை ரூ.5.50 இலட்சம் ஆகும். இதில் தற்சமயம் வரை ரூ5,36,857/- மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளது. மேற்படி பணியில் தொகை மீதம் இருப்பதால் மேற்காண் பணிக்கு ஒப்பந்ததாராக உள்ள திரு.கே. கிருஷ்ணசாமி அவர்களுக்கு மேலும் ஒரு மாத காலம் (2019- ஏப்ரல்) மேற்படி பணிக்கான ஒப்பந்தத்ததை நீடிப்பு செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**

தெருவிளக்கு பராமரிப்பு அவசர அவசியம் கருதி மேலும் ஒரு மாதம் காலம் ஒப்பந்தப்புள்ளி நீட்டிப்பு செய்யலாம்.

( ந.க.எண். 351/2018/இ1)

**பொருள்–301**

திருத்தங்கல் நகராட்சியில் சிறுமின்விசை பம்புகள் இயக்குவதற்கு வருடாந்திர ஒப்பந்தம் அடிப்படையில் பணிகளை மேற்கொள்ள ரூ.9,00,000/- (ஒன்பது இலட்சம் ரூபாய்) மதிப்பீடு தயார் செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தது. மேற்காண் பணிக்கான ஒப்பந்தக் காலம் 31.03.2019 உடன் முடிவடைந்தாலும் தற்சமயம் பாரளுமன்ற தேர்தல் நன்னடத்தை விதிகள் நடைமுறையில் உள்ளதாலும் புதிய ஒப்பந்தப்புள்ளிகள் கோர இயலாத காரணத்தினால் அதே விலை விகிதத்திற்கு தயார் செய்யப்பட்ட திருத்திய மதிப்பீடு ரூ.10,00,000/- ( ரூபாய் பத்து இலட்சம்) மட்டும் (ஏப்ரல் முதல் அக்டோபர் வரை) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**

தேர்தல் நன்னடத்தை விதிகள் அமலில் உள்ள காரணத்தினால் திருத்திய மதிப்பீடு தொகை ரூ.10.00 இலட்சத்திற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

( ந.க.எண். 380/2018/இ1)

**பொருள்–302**

திருத்தங்கல் நகராட்சி பொதுநிதி திட்டம் 2018-2019-ம் ஆண்டு நகராட்சி பகுதியில் உள்ள பெரியகுளம் நீரேற்று நிலையத்தில் பம்புகளை இயக்குவதற்கு வருடாந்திர ஒப்பந்தம் அடிப்படையில் திரு.கே.கிருஷ்ணசாமி என்பருக்கு 2018-19-ம் ஆண்டு ஒப்பந்தம் விடப்பட்டது. மேற்கண்ட பணிக்கு ஒப்பந்தகாலம் 31.03.2019-ல் முடிவடைகிறது. தற்சமயம் பாராளுமன்ற தேர்தல் 2019-ன் நடத்தை விதிகள் அமலில் உள்ள காரணத்தினால் மேற்காண் பணிக்கு புதிய ஒப்பந்தப்புள்ளிகள் கோர இயலாத சூழ்நிலைகள் உள்ளது. மேலும் மேற்படி பணிக்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி பெற்றப்பட்ட தொகை ரூ.9.00 இலட்சம் ஆகும். இதில் தற்சமயம் வரை ரூ.7,25,760/- மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளது. மேற்படி பணியில் தொகை மீதம் இருப்பதால் மேற்காண் பணிக்கு ஒப்பந்ததாராக உள்ள திரு.கே. கிருஷ்ணசாமி அவர்களுக்கு மேலும்

மூன்று மாத காலத்திற்கு (2019- ஏப்ரல் , மே, ஜீன்) மேற்படி பணிக்கான ஒப்பந்தத்ததை நீடிப்பு செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**

குடிநீர் விநியோக அத்தியவாசிய பணிகளை கருத்தில் கொண்டு மேற்படி பணிக்கு மேலும் மூன்று மாதம் காலம் ஒப்பந்தப்புள்ளி நீட்டிப்பு செய்யலாம்.

( ந.க.எண். 1648/2018/இ1)

**பொருள்–303**

திருத்தங்கல் நகராட்சி பொதுநிதி திட்டம் 2018-2019-ம் ஆண்டு ஆணைகுட்டம் மற்றும் தாளோடை பகுதியில் உள்ள சிறுமின் விசை பம்புகளை இயக்குவதற்கு வருடாந்திர ஒப்பந்தம் அடிப்படையில் திரு.கே.கிருஷ்ணசாமி என்பருக்கு 2018-19-ம் ஆண்டு ஒப்பந்தம் விடப்பட்டது. மேற்கண்ட பணிக்கு ஒப்பந்தகாலம் 31.03.2019-ல் முடிவடைகிறது. தற்சமயம் பாராளுமன்ற தேர்தல் 2019-ன் நடத்தை விதிகள் அமலில் உள்ள காரணத்தினால் மேற்காண் பணிக்கு புதிய ஒப்பந்தப்புள்ளிகள் கோர இயலாத சூழ்நிலைகள் உள்ளது. மேலும் மேற்படி பணிக்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி பெற்றப்பட்ட தொகை ரூ.9.00 இலட்சம் ஆகும். இதில் தற்சமயம் வரை ரூ.7,45,280/- மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளது. மேற்படி பணியில் தொகை மீதம் இருப்பதால் மேற்காண் பணிக்கு ஒப்பந்ததாராக உள்ள திரு.கே. கிருஷ்ணசாமி அவர்களுக்கு மேலும் மூன்று மாத காலத்திற்கு (2019- ஏப்ரல் முதல் ஜுன்வரை) மேற்படி பணிக்கான ஒப்பந்தத்ததை நீடிப்பு செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**

குடிநீர் விநியோக அத்தியவாசிய பணிகளை கருத்தில் கொண்டு மேற்படி பணிக்கு மேலும் மூன்று மாதம் காலம் ஒப்பந்தப்புள்ளி நீட்டிப்பு செய்யலாம்.

( ந.க.எண். 1648/2018/இ1)

**பொருள்–304**

இந்நகராட்சியில் நடைபெற்று வரும் திட்டப்பணிகள் தொடர்பான விளம்பர அறிவிப்பு போலீஸ் ஸ்டோரி மாத இதழில் ஜனவரி மாதம் வெளியிடப்பட்டமைக்கு Sri Sakthi Publication என்ற விளம்பர நிறுவனத்திடமிருந்து பட்டியல் வரப்பெற்றுள்ளது. பட்டியல் எண். 033/PS/TRTL/VRNR நாள். 05.02.2019 தொகை ரூ.25,725/- ( ரூபாய் இருபத்தி ஐந்து ஆயிரத்தி ஏழு நூற்றி இருபத்தி ஐந்து மட்டும்) மேற்படி நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

( ந.க.எண். 922/2019/இ1)

**பொருள்–305**

இந்நகராட்சி அலுவலகத்தில் ஏற்படும் மின் தடைகளை சமாளிக்கும் பொருட்டு புதிதாக Kirloskan 40 KVA Genset அமைக்கப்பட்டுள்ளது. மேற்படி ஜெனரேட்டரை மின்தடை ஏற்படும் நேரங்களில் இயக்கி அலுவலகப் பணிகளை தடையின்றி மேற்கொள்ள அதற்கான டீசல் செலவினத் தொகை மாதம் ஒன்றிற்கு ரூ.45,000/- (ரூபாய் நாற்பத்தி ஐந்தாயிரம்) மட்டும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண் : 950/இ1/2019)

**பொருள்–306**

இந்நகராட்சியில் பொதுநிதி திட்டம் 2019-2020-ன் கீழ் தெருவிளக்கு பராமரிப்பு பணிகளுக்கு தேவையான மின் உபரிசாமான்கள் கொள்முதல் செய்து இருப்பில் வைத்து பயன்படுத்திக்கொள்ள ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.10,00,000/-(ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதிவேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண் : 721/இ1/2019)

**பொருள்–307**

திருத்தங்கல் நகராட்சி வார்டு எண். 19 ஆசாரிமார் நந்தவனத் தெருவில் உள்ள பெண்கள் சுகாதார வளாகம் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது. சுகாதார வளாகத்தினுள் உள்ள கதவுகள் மற்றும் கோப்பைகள் போன்றவை பழுதடைந்து உள்ளது. இதனால் அப்பகுதி மக்களின் பொது சுகாதாரம் அவசர அவசியம் கருதி மேற்படி சுகாதார வளாகத்தினை மராமத்து செய்து பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.3,50,000/- ( ரூபாய் மூன்று இலட்சத்தி ஐம்பதாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

( ந.க.எண். 1146/2019/இ1)

பொருள்–308

திருத்தங்கல் நகராட்சி வார்டு எண். 21 சுக்கிரவார்பட்டி மெயின் ரோடு குறுக்குத் தெருவில் உள்ள திறந்த வெளி கிணறு பாலடைந்து மிகவும் பயனற்ற நிலையில் உள்ளது. அக்கிணற்றில் உள்ள குப்பைகளினால் அப்பகுதியில் நோய் தொற்றுக்கள் ஏற்படும் அபாயம் உள்ளது. எனவே அப்பகுதி மக்களின் சுகாதார அவசியம் கருதியும் குடிநீர் ஆதாரணத்தினை கருத்தில் கொண்டும் மேற்படி திறந்த வெளி கிணற்றினை தூர்வாரி மராமத்து பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.4,00,000/- ( ரூபாய் நான்கு இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

( ந.க.எண். 1149/2019/இ1)

பொருள்–309

# CHAPTER

# BACKGROUND

## 1.1. INTRODUCTION

Municipal Solid Waste Management is a complex issue posing a formidable challenge to local authorities. Rapid pace of urbanization coupled with uncontrolled industrialization and changing life styles has resulted in high consumption pattern and generation of large volumes of solid wastein the urban areas, over the past few years, just the handling this Municipal Solid Waste (MSW) has assumed the proportion of a major organisational, financial and environmental challenge.

Recognising this Ministry of Environment, Forests& Climate Changes (MoEF&CC), Govt. of India had notified Municipal Solid Waste (Management & Handling) Rules, 2000 which was subsequently revised into Solid Waste Management Rules 2016 on 8$^{th}$ April 2016.**The above rule mandates each Urban Local Body (ULB) to frame Policy on Solid Waste Management and Solid Waste Management Action Plan to address the growing concern of waste management in the concerned town.**

## 1.2. SOLID WASTE MANAGEMENT RULES 2016

The responsibilities of various Ministries and local bodies for sustainable solid waste management have been highlighted in the SWM Rule 2016.

## 1.3. DUTIES OF LOCAL BODIES

It has been emphasised that it is the **Duty of local bodies** (as the prime responder for Solid Waste Management) to carry out the Collection, Transportation and Disposal of Solid waste in a scientific manner on day to day basis. The rule further facilitates the local bodies to apply penalty clause for the **effective enforcement** of the rule apart from the **user charges**.

## 1.4. DUTIES OF WASTE GENERATORS

The **Duty of Waste Generators** to segregate the waste at source as Biodegradable & Non-biodegradable waste and handing over the same to sanitary workers authorised by the local bodies, has also been prescribed in SWM Rules 2016. In a bid to encourage this and improve stakeholder participation for achieving zero littering (in open public spaces, drains, water bodies, etc.,) and to slash open burning, extensive awareness programs have been directed to be carried out by the animators in local bodies engaged for IEC activities.

## 1.5. DECENTRALISING THE WASTE MANAGEMENT PROCESS

Further the rule reduces the burden of local bodies by introducing the **concept of Bulk waste generator** and **Decentralising the waste management process**. Considering this, Government of Tamil Nadu has adopted a holistic State policy on 24$^{th}$ August 2018, towards sustainable waste management and local bodies are now engaging in the preparation of action plan for the same. In accordance with this, Action plan for Thiruthangal Municipality is framed.

## 1.6. STATE POLICY ON SOLID WASTE MANAGEMENT, GOVERNMENT OF TAMIL NADU

The changing urban life style has resulted in both positive and negative effects. While the standard of living condition has considerably improved, a large volume of solid waste has become its bye product. Many new approaches have been adopted to process these wastes in a sustainable manner.


### 1.7. ZERO-WASTE CONCEPT

The Government of Tamil Nadu has felt the necessity to frame a State policy to cater to the needs of Solid Waste Management covering right from Primary collection to scientific processing and disposal of the Municipal Solid Waste in an eco-friendly manner. The policy is drafted in such a way that it provides necessary guidance to dispose all type and nature of waste generated scientifically to achieve **the Zero-Waste Concept**. Every aspect such as Bio & Non-biodegradable waste (both recyclable and Non-recyclable), domestic hazardous waste, E-waste, street sweeping waste, highly littered public places with mixed wastes etc., are considered. The policy focuses on the technology suitable for the urban local bodies based on the Quality and the Quantity of waste that is being generated.

### 1.8. INFORMATION EDUCATION AND COMMUNICATION (IEC) ACTIVITIES

Apart from this, Bulk Waste Generators are activated to develop onsite facilities for handling the waste generated by them. Moreover, continuous and rigorous **IEC Programs are emphasized** to inculcate behavioral changes among the public to encourage Source Segregation.

**Figure 1: Approach of waste management-Government of Tamil Nadu**




# 1.CHAPTER

# PRESENT STATUS OF SOLID WASTE MANAGEMENT IN THIRUTHANGAL MUNICIPALITY

### 2.1 DOOR TO DOOR COLLECTION AND SEGREGATION

Thiruthangal Municipality comprises of 21wards with a population of 55362 as per 2011 census. The current population on 2018 is 63200. It consists of 15451 residential households with 582 commercial establishments. The town is spread over an area of 13 Sq. km.

An important aspect is that Lord Vishnu Temple (Nindra Narayana Perumal) is the famous and worship place and also one of the 108 Divyadesam. The people of Thiruthangal are mainly doing the business Fireworks, Tube works and match industries.

- ✓ The wet waste are collected on Door steps every day
- ✓ The dry waste is being collected once in a week i.e Wednesday
- ✓ The Domestic Hazardous waste such as Napkin, Diaper collected along with wet waste.
- ✓ E Waste, other domestic hazardous waste and C&D waste collection to be practiced.
- ✓ Animators are involved in imparting the practice of Source segregation through Behavioral change.

**Table 1: % of D2D collection & source segregation**

## 2.2 QUANTITY OF WASTE GENERATION

| | |
|---|---|
| Waste Generation | 16TPD |
| Door to Door Collection% | 100 % |
| Source Segregation % | 60 % |

Thiruthangal Municipality generates a total of 16 Metric Ton of Solid Waste Per Day (16 TPD). The per capita generation is 250 gms / day. The sources and types of waste are obtained by conducting random sample survey in three different areas – Residential, Commercial and Slums during three different occasions –week days, holidays and festival occasion and the same.

**Table 2: Waste Generation**

| Source of Waste | No. of HH/Assessment | Waste Generation in TPD | | | Total Waste Generated in TPD |
|---|---|---|---|---|---|
| | | Wet Waste | Dry Waste | Inert, Silt and C&D | |
| **Domestic** | 15451 | 8.50 | 3.50 | 1.5 | 12.00 |
| **Commercial** | 582 | 1.50 | 1.00 | | 2.50 |
| **Total** | - | 10.00 | 4.50 | | 16.00 |
| **BWG** | 9 | 1.25 | 0.25 | | 1.5 |

Note: BWGs are handling their waste themselves with their own risk.

## 2.3 COLLECTION AND TRANSPORTATION

- BOV are used at 400 HH/vehicle /day (covering 3 Trips)
- LCV are used at 1200 HH/Vehicle/day (covering 3 Trips)
- Primary collection at Door steps is being done and wastes collected are directly transported to processing centre. This is being done using
  - ✓ 10 BOV, 2 LCV and 45 Push Cart for 15451 HHs
  - ✓ 1 no. Tipper and 1 No. Dumper placer for 582 Commercial
  - ✓ 1 Tractor for street sweeping waste
  - ✓ Secondary collection and Transportation partially achieved.
- Collection of Wet waste is not being done from identified 9 nos of Bulk Waste Generator and instructed them to create their own processing at their premises.
  - ✓ 4 Nos of BWGs disposing the Wet waste directly to Piggery form.
  - ✓ 5 Nos of BWGs doing composting Process
  - ✓ Dry waste alone collected from BWGs.
- The bio medical waste from 2 Hospitals and clinic are being collected by the IMA authorized facilitator M/s. Ramky Energy & Environment Ltd., Kariyapatti.

## 2.4 PROCESSING STATUS ON DISPOSAL OF SOLID WASTE

- ✓ Micro level compost centre are being established on Decentralized basis by dividing the town into 4 segments (each segment covering 4 to 5 wards) in 4 Locations
- ✓ Saleable Dry wastes such as Recyclable plastic waste are sold to recyclers and the workers are permitted to share the monetary benefits.

# 2.CHAPTER
# ISSUES AND SHORTFALL

The Major issues such as (i) Inadequate planning (ii) In house capabilities (iii) Lack of Public awareness and Community Participation in segregation of Waste and handling of Waste (iv) Inadequate processing facilities (v) Improper implementation strategy have been considered

and accordingly the gap analysis in each activity of Solid Waste Management is done for Thiruthangal Municipality

**2.1 ISSUES IN COLLECTION AND TRANSPORTATION**

- Requirements of primary collection vehicle are arrived based on the type of vehicles, capacity of the vehicle and number of trips per vehicle based on the types of source from where the waste has to be collected. Finally the "Gap" is analyzed to take action to procure adequately.
- Route chart and Trip chart for each vehicle with designated sanitary workers are to be planned and followed.
- Adequate awareness among the citizen has to be done sustainably

**2.2 ISSUES IN SCIENTIFIC PROCESSING AND DISPOSAL**

- Insufficient manpower with adequate knowledge in processing at compost yard
- Wet waste disposal technology has to be finalized based on the quantity, quality and characteristic of solid waste at Thiruthangal Municipality.
- Dry waste disposal mechanism has to be derived

**2.3 ISSUES IN IN-HOUSE CAPABILITIES**

- All the staff involved in SWM have to be periodically provided with training on methodology and technology to keep them with updated skill knowledge
- The shortfall in man power to address the SWM has to be determined by conducting GAP analysis
- Thiruthangal municipality is entitled to engage 263 no. of sanitary workers as per GO Ms. No. 101. Dated 30.04.97.
- At present, only 32 Nos. of sanitary workers (32 permanent) are engaged in the collection process.
- Action has to be taken to have adequate sanitary workers and supervising staff.

# 3.CHAPTER

# VISION, GOALS, OBJECTIVES ON SWM FOR THIRUTHANGAL MUNICIPALITY

**3.1 VISION**

To provide better quality of life to the people of Thiruthangal Municipality and to make the town livable through sustainable Solid Waste Management strategy

**3.2 GOAL**

(i) To have high standard of cleanliness in Thiruthangal Municipality

(ii) To ensure 100% Door to Door collection of the waste and oblation of unhygienic system of disposal by the households

(iii)To ensure 100% waste segregation at source

(iv)To promote the practice of Reduce, Reuse, Recycle and Recover

**(v)** To have **"No Landfill Concept"**

**(vi)**To achieve **"Zero Waste Concept"**

**3.3 POLICY OBJECTIVE**

Objectives shall endeavor to

(i) Protect public health and environment

(ii) Make the citizen to realize the responsibility and accountability on SWM

(iii) Minimizing the generation of Solid Waste through sustainable IEC on 4R Concept

(iv) Involving the community groups RWA, CBOs, SHGs to ensure community participation in Managing and minimizing the municipal solid waste locally.

(v) Conduct periodical meeting and discussion to dispose the wet waste through composting process and to promote bio Manure

(vi) Provide integrated solution to dispose the solid waste (both wet and dry waste) with cost effective and efficient delivery of service

(vii) Dispose the dry waste through the vendors

(viii) Build in capacity of Municipal staffs through periodical training.

(ix) Promote **"Green Cross"** society at educational institution to impart the necessity of SWM to keep the town with livable condition.

(x) Promote the town to have better star rating in SWM

(xi) Make the SWM services self-sustaining by collecting user charges to cover Operation & Maintenance cost of the services and levy taxes to meet out the cost of capital investment.

(xii) Follow the polluter pay principle to bear the cost associated for damaging the environment.

**4.**Culminate the practice of throwing the waste in to the water bodies and culminate the practice of burning the garbage on road sides.**CHAPTER**

# IMPLEMENTATION STRATEGY

## 4.1 IMPLEMENTATION STRATEGY

| | |
|---|---|
| Door to Door Collection | • Wet waste collection on daily basis<br>• Dry waste collection on weekly basis (every Wednesday)<br>• Domestic Hazardous waste<br>i. Such as Napkin, Diaper and etc., will be collected separately during wet waste collection on daily basis.<br>ii. Other Domestic Hazardous waste such as discarded paint containers, garden pesticide and chemical detergent container etc., will be collected separately on monthly basis.<br>• E waste collection on monthly basis<br>• C & D waste on need basis<br>• Waste will not be collected from the Bulk waste generators |
| Segregation | • 100 % Source Segregation ensured through sustainable IEC activities engaging Animators ( Green Ambassadors) |
| Transportation | • Primary collection at door step using Battery Operated vehicles and Light commercial vehicles with proper route chart and trip chart<br>• Eliminating Secondary storage Bins on roadside<br>• Minimizing secondary transportation |
| Scientific Disposal of Waste | • Disposal of wet waste through composing and Establishing Micro level Compost Centers, On Site Composting Centers on Decentralized approach for processing and disposal of wet waste and green waste.<br>• Bio gas technology for food waste and slaughterhouse waste<br>• Disposing the dry waste to the identified vendors for recycling<br>• Plastic waste and other recyclable waste to dispose to the recyclers<br>• Other non recyclable but combustible to dispose to the vendors who need it use as furnace fuel or to dispose through Pyrolysis plant through PPP mode Other non recyclable and non combustible waste and silt are disposed along with C & D |

| | |
|---|---|
| | waste<br>• Other non recyclable and non combustible waste and silt are disposed along with C & D waste.<br>• Dead animals disposed scientifically through burial method in the earmarked site<br>• Hazardous waste and E waste to collect and store at Resource Recovery Center by Municipality and periodically dispose the same to PCB for further process.<br>• C & D waste to collect and store in the earmarked location and to use on needy basis. |
| IEC activities , Capacity buildings and motivation | • Periodical meeting with RWAs , NGOs, elected body members Bulk Waste Generators and periodical training to sanitary workers.<br>• Updating the knowledge of the personnel involving in SWM |

**4.2 SWM MONOTORING CELL**

The Municipality will constitute a SWM Monitoring Committee under the Chairmanship of Municipal Chairman comprising the Commissioner as Member secretary and five other members including Health officer/ sanitary officer, Engineer, Town planner, and two elected representatives. This committee will meet once in a month and discuss the implementation strategy and facilitate the ULB for implementation of SWM.

**4.3 HOME COMPOSTING**

Municipality will take all effort to promote the Home Composting practice among the citizen through the intensive campaign

**OFFICE REMARKS**

1. Council approved the above subject
2. Sanctioned the press printing charges Rs.18900/-

**(Roc.No.610/2019/H1)**

**பொருள்–310**

இந்நகராட்சி எல்லைகுட்பட்ட 21 வார்டு பகுதிகளில் உள்ள பெரிய ஓடைகள், வாறுகாலில் மணல் தூர்வாறுதல், அடைப்பு நீக்கும் பணி, ரோட்டின் இரு புறமும் உள்ள முட் செடிகளை நீக்கி சுத்தம் செய்யும் பணி மற்றும் சிவகாசி–விருதுநகர் மெயின் ரோட்டில் உள்ள குப்பை கிடங்கில் ஒன்று சேரும் குப்பைகளை சுத்தம் செய்யும் பணி போன்ற பணிகளை ஜே.சி.பி இயந்திரம் (Earth Movers)மூலம் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் தொகை ரூ. 5.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

1. பொது சுகாதார அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.2926/2018/எச்1)

**பொருள்–311**

இந்நகராட்சி பகுதியில் ஜே.சி.பி. இயந்திரம் மூலம் பணி மேற்கொள்ள 23/11/2018ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ளது.

| | |
|---|---|
| 1)பி. முருகன் லிங்காபுரம் காலனி சிவகாசி | ரூ. 700/Hr. |
| 2)M. கண்ணன் தோப்பு தெரு திருப்பரங்குன்றம் | ரூ. 750/ Hr. |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியில் மிக குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த திரு. பி. முருகன் என்பவர் மூலம் ஜே.சி.பி. இயந்திரம் கொண்டு பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு–**

1, மன்றம் அனுமதிக்கலாம்

2, முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.2926/2018/எச்1)

**ஆணையாளர்/தனிஅலுவலர்**
**திருத்தங்கல் நகராட்சி**